# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.24 / 2015**

திரு. உ.பரமசிவம்,
60–இ, கீழவைத்தியநாதபுரம்,
தத்தனேரி,
மதுரை–18 . . . மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
கோ.புதூர்,
மதுரை . . . எதிர்மனுதாரர்
(திரு.ஜி.விஜயன், உதவி பொறியாளர்,
கூடல் நகர்)

**கேட்புரை நாள் : 7–5–2015**

**ஆணை நாள் : 25–5–2015**

திரு. உ.பரமசிவம், கீழவைத்தியநாதபுரம், மதுரை அவர்களின் 21–2–2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.24/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 7–5–2015 அன்று நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதங்கள். எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

மதுரை கூடல் நகர், விளாங்குடி மற்றும் சங்கீத் நகர், மின்நுகர்வோர்கள் தங்கள் குறைகளை தெரிவிக்கவும், பரிகாரம் தேடவும், மிகத் தொலைவிலுள்ள செயற் பொறியாளர் சமயநல்லூர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியது இருப்பதால் சங்கீத் நகர் உபநிலைய

இளநிலை மின் பொறியாளருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. <u>வழக்கின் சுருக்கம்</u>

2.1 திரு உ.பரமசிவம் அவர்கள் மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு, கூடல் நகர், விளாங்குடி, மற்றும் சங்கீத் நகர் மின் நுகர்வோர்கள், தங்களின் குறைகளை நிவர்த்தி செய்ய செயற்பொறியாளர்/சமயநல்லூர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியது இருப்பதால் சங்கீத் நகர் இளநிலை மின் பொறியாளருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று 26–9–2014 மனு செய்துள்ளார்.

2.2 மன்றம் தன்னுடைய 29–11–2014 நாளிட்ட தீர்வை 29–12–2014 அன்று மனுதாரருக்கு அனுப்பியுள்ளது. மேற்கண்ட தீர்வில் திருப்தியில்லாததால், மேல் முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பு சமர்பித்துள்ளார்.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 மதுரை நுகர்வோர் குறைதீர்மன்ற தலைவர் அவர்களின் தீர்ப்பில் சங்கீத் நகர் சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளர் அலுவலகம் மேற்பார்வை பொறியாளர் பெ.நகர் மதுரை, கோ. புதூர் அவர்கள் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது என்றும் நிர்வாக காரணங்கள் மற்றும் கொள்கை முடிவு என்பதாலும் அதிகார வரம்பு பகிர்ந்து அளிக்கப்பட்டது என திருப்தியில்லாத தீர்ப்பை வழங்கியுள்ளார். சங்கீத் நகர் உபமின் நிலையம் ஊரகப் பகுதியாகும். தலைவர் அவர்கள் குறிப்பிட்டது, பெருநகர் பகுதியாகும்.

3.2 இன்றும் சங்கீத் நகர், விளாங்குடி உப மின் நிலைய இளநிலை பொறியாளர் அவர்கள் செயல்பாட்டிற்குட்டவைகளுக்கு மிக தொலைவில் உள்ள சமயநல்லூர் மேற்பார்வை பொறியாளர் (செயற்பொறியாளர் என்று இருக்க வேண்டும்) அலுவலகத்திற்கே பொதுமக்கள் மற்றும் மின் நுகர்வோர்கள் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை உள்ளது. இதனால் பொருட்செலவும் கால விரையமும் அதிகமாகிறது.

## 4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 கூடல்நகர், விளாங்குடி மற்றும் சங்கீத் நகர் பகுதியில் உள்ள மின் நுகர்வோர்களுக்கான உதவி பொறியாளர்/பகிர்மானம்/விளாங்குடி அலுவலகமானது மேற்பார்வை பொறியாளர்/ பெருநகர் வட்டம் / மதுரை அவர்களின் எல்லைக்கு உட்பட்டு அவரது கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அலுவலகம் ஆகும்.

4.2 கூடல்நகர், விளாங்குடி மற்றும் சங்கீத் நகர் பகுதியில் உள்ள மின் நுகர்வோர்கள், மேல் முறையீட்டாளர் தெரிவித்தது போல் சமயநல்லூரில் அமைந்துள்ள செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அப்பகுதி மின் நுகவோர்களுக்கான செயற்பொறியாளர் அலுவலகமானது அரசரடி, மதுரை–16ல் அமைந்துள்ளது.

4.3 உதவி பொறியாளர்/பகிர்மானம்/ விளாங்குடி அலுவலகம் மேற்பார்வை பொறியாளர்/ பெருநகர் வட்டம் / மதுரை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழும், உதவி பொறியாளர்/ பகிர்மானம் / கூடல்நகர் அலுவலகம் மேற்பார்வை பொறியாளர்/ மதுரை மின்பகிர்மான வட்டம்/ மதுரை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழும் இயங்கி வருகிறது.

4.4 உதவி பொறியாளர்/பகிர்மானம்/விளாங்குடி அலுவலகம் மற்றும் உதவி பொறியாளர்/பகிர்மானம்/கூடல்நகர் அலுவலகத்தின் மின்பகிர்மானங்களின் எல்லைகள் முற்றிலும் வேறுபட்டது.

4.5 கூடல்நகர், சங்கீத் நகர், விளாங்குடி பகுதியில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மேல் முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ளது போல், அவர்கள் சிரமங்ளுக்கு உட்பட்டதாக எவ்வித மனுவும் இதுவரை செயற்பொறியாளர்/ சமயநல்லூர் அலுவலகத்தில் பெறப்பட்டவில்லை.

4.6 நிர்வாக காரணங்கள் மற்றும் கொள்கை ரீதியான முடிவின் அடிப்படையில் மட்டுமே அதிகார வரம்பு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது என்ற தீர்ப்பில் மேல்முறையீட்டாளர் திருப்தியில்லை என குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதல்ல.

4.7 உதவி பொறியாளர்/பகிர்மானம்/விளாங்குடி அலுவலகமும், உதவி பொறியாளர்/ பகிர்மானம்/ கூடல்நகர் அலுவலகமும் நிர்வாக காரணங்கள் மற்றும் கொள்கை முடிவின் அடிப்படையிலே அதிகார வரம்பு மற்றும் எல்லைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டு, தங்களின் சார்புடைய உயர் அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

4.8 உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் அதிகார வரம்பானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். எனவே உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளரின் அதிகாரத்தை உதவிப் பொறியாளருக்கு பகிர்ந்து அளிக்க இயலாது என்பதனை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 7.5.2015 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர், அவர் 73 வயதான இருதய நோயாளி என்பதால், அவரது வயது, உடல் நிலை கருதி நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். அவரது எழுத்துப்பூர்வமான வாதுரையையும் சமர்பித்துள்ளார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில், திரு.ஜி.விஜயன், உதவி பொறியாளர், கூடல்நகர், மதுரை மின்பகிர்மான வட்டம் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 6. <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர், தன்னுடைய 30–4–2015 நாளிட்ட எழுத்துபூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதங்களை சமர்பித்துள்ளார்.

6.1 தமிழ்நாடு மின் வாரிய இளநிலை உதவி பொறியாளர் அலுவலகம், பகிர்மானம், கூடல் நகர் 2012 ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், மணியஞ்சி கிராமம் –(1), பூதகுடி கிராமம்–(2), குமாரம் கிராமம்–(3), அகிலை கிராமம்–(4), பொதும்பு கிராமம்–(5), கோவில்பாப்பாக்குடி கிராமம்– (6), தினமணிநகர் கிராமம்–(7), சிக்கன்தர் சாவடி –(8) ஆகிய எட்டு ஊரக புற கிராமங்களில் வசிக்கும் பல ஆயிரம் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டது.

6.2 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வாரியம் உதவி மின் பொறியாளர் (பகிர்மானம்) விளாங்குடி அலுவலக கட்டிடத்தில் ஒரு பகுதியில் இயங்க அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. விளாங்குடி இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்கு கட்டுப்பட்ட பொது மக்கள் யாரும் சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியது இல்லை என்பது உண்மையே. அது மதுரை அரசரடி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது. பிரதிவாதியின் வாதுரை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

6.3 ஆனால் அதே கட்டிடத்தில் இயங்கும் கூடல் நகர் பகிர்மான இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட மேற்படி எட்டு கிராமங்களின் பொதுமக்களின் மனுக்களை சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல ஆணையிடுவது, நீதிக்கு புறம்பானது மிகுந்த கால விரையம், பணச்செலவும், மன உளைச்சலுக்கு உள்ளானது.

6.4 கூடல் நகர் இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்திலிருந்து சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகம் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால் ஒரு கிலோமீட்டர் தூரம் உள்ள கூடல் நகர் மின்வாரிய அலுவலகத்திற்கு அளிக்க வேண்டிய மனு, அதிக தூரமுள்ள சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிருப்பதால் பொதுமக்களுக்கு மிகுந்த பொருட்செலவும் காலநேரமும் வீணாகிறது.

6.5 இக்கோரிக்கை ஆனது அவரது தனிப்பட்ட முறையீடு அல்லாது எட்டு கிராம பொதுமக்களின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடே ஆகும். கூடல் நகர், இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்தில் மனுக்களை பெற்று மறு மொழி அளித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க தற்போது பணியாற்றும் போதிய அனுபவமிக்க இளநிலை மின் பொறியாளர் அவர்களுக்கு அனுமதி அளிக்க மறுப்பது வாரியத்தின் கொள்கை முடிவு என்பது நீதிக்கு புறம்பானது. தமிழ்நாடு மின்சாரத்துறை வாரிய அதிகார வரம்பிற்குள் நான் எவ்விதத்திலும் குறுக்கிடவில்லை.

6.6 ஆகவே மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள் பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று கூடல் நகர் மின் இளநிலை செயற்பொறியாளர் (பகிர்மானம்) அவர்களுக்கு வாரியம் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்தை வழங்கி பொதுமக்கள் பயன்படவும், அவர்களுக்குஏற்படும் பொருட் செலவும் காலநேர விரையத்தை தவிர்க்கவும், பொதுமக்களுக்கு மன உளைச்சல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

## 7. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 உதவிபொறியாளர்/கூடல் நகர்/ எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 கூடல் நகர் பிரிவு அலுவலகம் 5.9.2012 ற்கு முன்பாக மதுரை மின்பகிர்மான வட்டம்/ பெரு நகரத்திலிருந்து அப்பொழுது மாநகராட்சியிலுள்ள சில பகுதிகளும், சில பகுதியும், ஊரக பகுதியும் அந்த பிரிவு அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. அந்நிலையில், அந்த பிரிவு அலுவலகம், செயற்பொறியாளர், அரசரடியின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது.

7.3 5.9.2012 ல், மாநகராட்சி பகுதிகள், விளாங்குடி பிரிவு அலுவலகத்துடன் சேர்க்கப்பட்டது. கூடல் நகர் பிரிவு அலுவலகம், ஊரக பகுதிகள் மட்டும் உடைய பிரிவு அலுவலகமாக ஆக்கப்பட்டு, மதுரை மின் பகிர்மான வட்டத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும், செயற்பொறியாளர்/ சமயநல்லூர் ஆளுகையின் கீழ் இணைக்கப்பட்டது.

7.4 கூடல் நகர் பிரிவு அலுவலகத்திற்கும், சமயபுரம் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கும் இடைபட்ட தூரம் சுமார் 12 கி.மீ என்றும் தெரிவித்தார்.

7.5 மேலும், நுகர்வோர்களிடம் இருந்து மனுக்கள் பிரிவு அலுவலகத்தில் பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று வாதாடினார். எனவே, மனுக்கள், செயற்பொறியாளர் அலுவலகத்தில்தான் அளிக்கப்பட வேண்டியுள்ளது என்ற மேல் முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று வாதிட்டார்.

7.6 மின்சாரவாரியத்தில் அலுவலகர்களுக்கு அவர்களின் பதவிக்கு ஏற்ப அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மனுவிலுள்ள கோரிக்கை, பிரிவு அலுவலரின் அதிகார வரம்பிற்குள் இருந்தால் பிரிவு அலுவலரே மனுவின் மீது தக்க நடவடிக்கை எடுத்துவிடுவார் என்றும் மேல் அலுவலர்களின் அதிகார வரம்பிலுள்ள கோரிக்கைகள், பிரிவு அலுவலரின் பரிந்துரையுடன் உயர் அதிகாரிகளுக்கு சமர்பிக்கப்பட்டு, மனுதாரரின் கோரிக்கைகள் மீது தீர்வுகள் வழங்கப்படுகின்றன என்றும் வாதிட்டார்.

7.7 மேலும் ஒவ்வொரு பதவிக்கும் அளிக்கப்படும் அதிகாரம் என்பது, வாரியத்தினால் வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். எனவே, செயற்பொறியாளரின் அதிகாரத்தை, உதவி பொறியாளருக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 இந்த மேல் முறையீட்டாளர், கூடல் நகர், இளமின் பொறியாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட எட்டு கிராமங்களின் பொது மக்களின் மனுக்களை சமர்பிக்க 30 கி.மீ தூரத்திலுள்ள சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல ஆணையிடுவது, நீதிக்கு புறம்பானது, மிகுந்த கால விரையம், பணச் செலவும் மற்றும் மன உளைச்சலும் உள்ளது என்று வாதிட்டுள்ளார்.

8.2 மேலும், கூடல் நகர், இள மின் பொறியாளர், அலுவலகத்தில் மனுக்களை பெற்று மறுமொழி அளித்து அதன்மீது நடவடிக்கை எடுக்க தற்பொழுது பணியாற்றும், போதிய அனுபவமுள்ள இளநிலை மின்பொறியாளருக்கு அனுமதி அளிக்க மறுப்பது வாரியத்தின் கொள்ளை முடிவு என்பது நீதிக்கு புறம்பானது என்றும் வாதிட்டுள்ளார்.

8.3 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளிரின் கோரிக்கையிலுள்ள விளாங்குடி மற்றும் சங்கீத் நகர் பகுதியுள்ள நுகர்வோர்கள் உதவி பொறியாளர்/பகிர்மானம் விளாங்குடி அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் என்றும், அவர்கள் சமயநல்லூர் செயற்பொறியாளர் அலுவலகம் செல்ல தேவையில்லை என்றும், அந்த பகுதி மின்நுகர்வோர்களுக்கான செயற்பொறியாளர் அலுவலகம், அரசரடியில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

8.4 கூடல் நகர், சங்கீத் நகர், விளாங்குடி பகுதியிலுள்ள மின்நுகர்வோரிகளிடமிருந்து மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ளது போல், சிரமங்கள் உள்ளதாக இதுவரை எந்த மனுவும், செயற்பொறியாளர், சமயநல்லூர் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

8.5 அதிகாரிகளுக்கு அதிகாரம், நிர்வாக காரணங்கள் மற்றும் கொள்கை ரீதியான முடிவின் அடிப்படையில் மட்டுமே அதிகார வரம்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, உதவிசெயற்பொறியாளர் மற்றும்,

செயற்பொறியாளருக்கான அதிகாரத்தை உதவி பொறியாளருக்கு பகிர்ந்து அளிக்க முடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

8.6 எதிர்மனுதாரரின் பிரதிநிதி, உதவி பொறியாளர், கூடல் நகர் அவர்களால் அவரின் அலுவலகத்தில் பெறப்படும் நுகர்வோர்களின் மனுக்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், நுகர்வோரின் கோரிக்கைக்கு தகுந்தாற்போல் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரின் உத்தரவு பெறப்பட்டு, நுகர்வோரின் மனுவிலுள்ள கோரிக்கைகளுக்கு தகுந்த நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன என்றும் வாதிட்டார். எனவே, மனுக்கள், உதவிபொறியாளர் அலுவலகத்திலும் பெறப்படுகின்றன என்றும் வாதிட்டார்.

8.7 இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி எண் 2 (f) மற்றும் 5 ஆகியவற்றை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" xxx xxx xxx*
*xxx xxx xxx*
*(f) "complaint" means any grievance made by a complainant in writing on:-*
*(i) defect or deficiency in electricity service provided by the licensee;*
*(ii) unfair or restrictive trade practices of licensee in providing electricity services;*
*(iii) Charging of a price in excess of the price fixed by the Commission for consumption of electricity and allied services;*
*(iv) Electricity services which will be unsafe or hazardous to public life in contravention of the provisions of any law for the time being in force.*

*5. The forum shall take up any kind of grievances/complaints as defined in clause 2 (f) of these Regulations. However, the consumer's grievances concerned with*
*(i) unauthorized use of electricity as detailed u/s 126 and*
*(ii) offences and penalties as detailed u/s 135 to 141 of the Electricity Act 2003 are excluded from the purview of this forum."*

8.8 மேற்கண்ட விதி 2 (f) மற்றும் 5 ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, மேற்கண்ட வரையறைக்குள் வரும் நுகர்வோர்களின் கோரிக்கைகள் தான் மன்றம் விசாரித்து தீர்வு வழங்க முடியும். மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மேற்கண்ட மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான விதி 2 (f) வில் விவரித்துள்ள முறையீடுகள் என்ற வரையறைக்குள் இல்லை.

8.9 மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பல்வேறு மின்சேவைப் பிரிவுகளில் கடைபிடிக்கப்பட வேண்டிய செயல்திற செந்தரங்களுக்காக தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளை நிர்ணயித்துள்ளது. மேற்கண்ட விதித்தொகுப்பின் விதி 17ல் நுகர்வோரின் முறையீடுகளுக்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில் அதற்கு நிவாரணம் என்ன என்பதுவும் கொடுக்கப்பட்டுள்ளது.

8.10 ஒழுங்குமுறை ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள விதித் தொகுப்பிற்கு இணங்க பணிகளை செய்வதற்கு, நிர்வாக வசதிக்கு, ஏற்ப அதிகாரங்களை பணிதன்மைக்கு தகுந்தவாறு பகிர்ந்தளிப்பது என்பது உரிமதாரரின் உரிமை.

8.11 எனவே மேற்கண்ட பத்தி எண்கள் 8.8, 8.9 மற்றும் 8.10இன்படி உதவி பொறியாளர் / கூடல் நகர் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் பரிசீலித்து தீர்வு வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 9. <u>முடிவுரை</u>

9.1 மேற்கண்ட பத்தி எண்.8இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதி2(f)வில் விவரித்துள்ள முறையீடுகள் என்ற வரையறைக்குள் இல்லை என்பதாலும், மேலும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வழங்கப்பட்டுள்ள விதித்தொகுப்பிற்கு இணங்க பணிகளை செய்வதற்கு உரிமம்தாரரின் அலுவலர்களுக்கு அவர்களின் பணித்தன்மைக்கு ஏற்ப அதிகாரங்களை பகிர்ந்து அளிப்பது உரிமம்தாரரின் உரிமை என்பதாலும் மதுரை மின் பகிர்மான வட்டத்தின் தீர்வில் நான் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன் மேல் முறையீட்டு மனு எண்.24 /2015 முடிவிற்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. உ.பரமசிவம்,
60–இ, கீழவைத்தியநாதபுரம்,
தத்தனேரி,
மதுரை–18

2) மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோ.புதூர், மதுரை.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோ.புதூர், மதுரை.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.